## முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு

O.S.No. 64 / 2016

தேதி : 18.07.2019

வா.சா.2 -கார்த்திகேயன்

**சாட்சி இன்று ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எங்கள் வங்கிக் கிளையில் ஈஸ்வரமூர்த்தி என்பவர் ஜீடெக் ஆட்டோ மோட்டிவ்ஸ் என்ற பெயரில் வங்கிக்கணக்கு வைத்திருந்தார். அந்த நிறுவனத்தின் உரிமையாளர் என்ற முறையில் வங்கிக் கணக்கு வைத்திருந்தார் என்றால் சரிதான். அந்த நிறுவனத்திற்காக எங்கள் வங்கியில் கேஸ் கிரடிட் லோன் லிமிட்டில் கடன் வாங்கியிருந்தார் . அந்த கேஸ் கிரடிட் லோன் என்பது தனி கணக்கு அதற்காக ஈஸ்வரமூர்த்தி காசோலை பெற்றிருந்தாரா என்றால் தெரியவில்லை. தாவா காசோலை ஆனது அவரது நடப்புகணக்கிற்காக கொடுக்கப்பட்டது . 01.06.2015 ம் தேதியிலும் 15.06.2015 ம் தேதியிலும் அந்த கேஸ் கிரடிட் லோன் கணக்கில் எவ்வளவு தொகை இருந்தது என்று தெரியுமா என்றால் நான் அவருடைய நடப்பு கணக்கு ஆவணங்களை மட்டும் தான் பார்த்து வந்தேன் . ஈஸ்வரமூர்த்தி எங்களது வங்கிக் கிளையில் கடன் பெற்றுள்ளார் . அது கேஸ் கிரடிட் லோனா அல்லது டேர்ம் லோனா என்று தெரியவில்லை. அந்த கடன் தொகை தீர்க்கப்படாமல் உள்ளது என்றால் சரிதான். வழக்கு காசோலைகள் இரண்டுமே அடுத்தடுத்த எண்ணாக உள்ளது என்றால் சரிதான். 01.06.2015 ம் தேதிக்கு பிறகு தாவா காசோலை எங்களுக்கு பிறகு உள்ள காசோலைகள் எங்கள் வங்கிக்கு வசூலுக்கு வந்ததா என்றால் அவரது வங்கிக் கணக்கு பட்டியலைப் பார்த்துதான் சொல்ல முடியும். ஈஸ்வரமூர்த்தி 04.08.2015 அன்று இறந்து விட்டார் என்றும் அந்த விவரம் வங்கிக்கு தெரியப்படுத்தப்பட்டு அவரது கணக்கு டார்மென்டில் வைக்கப்பட்டது என்றும் சொன்னால் சரிதான். தாவா காசோலைகள் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்ட போது அந்த காரணத்தைச் சொல்லிதான் திருப்பப்பட்டது என்றால் அவரது இறப்பின் காரணமாக திருப்பப்பட்டது. அவரது இறப்பின் காரணமாக காசோலை திருப்பப்பட்டதா காசோலையில்

உள்ள வேறு விவரங்களை சரிபார்க்க வில்லை என்றால் அந்த சமயத்தில் சரிபார்க்க வாய்ப்பில்லை.

அனுமதியின் பேரில் மறுவிசாரணை

காசோலை திருப்பப்பட்ட சமயத்தில் எங்கள் வங்கி சத்திரோடு கிளையில் நான் பணிபுரியவில்லை .

குறுக்குவிசாரணை இல்லை.